## மேல் மாகாண மாகாண சபை - சபைக் கூட்டம்
## 2013 செப்டெம்பர் மாதம் 24 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு

### நிகழ்ச்சி நிரல்

I. **தவிசாளரின் அறிவிப்புக்கள்**

II. **அறிக்கைகளையும், ஆவணங்களையும் சமர்ப்பித்தல்**

III. **செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்**

IV. **மனுக்கள்**

V. **கேள்விகள்**

01. **கௌரவ யு.ஜோர்ஜ் பெரேரா எதிர்க்கட்சியின் பிரதான ஏற்பாட்டாளரினால் கௌரவ போக்குவரத்து, விளையாட்டு, இளைஞர் விவகார, கலை, கலாசார நடவடிக்கை, கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கல் மற்றும் பகிர்ந்தளிப்பு நடவடிக்கை, கிராம அபிவிருத்தி அமைச்சரிடம் 2013.08.06 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (கே/v (1)13/12)**

அ. அத்தனகல்ல பொதுச் சபைக் கூட்டுறவுச் சங்கத்தின் தவிசாளர் கம்பஹா மாவட்ட கிராமிய வங்கி சங்கத்தின் பணிப்பாளர் என்பதனை நீங்கள் அறிவீர்களா?

ஆ. இதன் காரணமாக கூட்டுறவு சபையானது வருடாந்தம் 16.25% வட்டி ஒன்றினை பெற்றுக் கொடுப்பதாக அறிவித்திருந்த போதும் சங்கத்துக்கு உரிய நிதி கம்பஹா மாவட்டத்தின் கூட்டுறவு கிராமிய வங்கியில் ரூபா 375 இலட்சம் 15.25% வட்டிக்கும் கொழும்பு கிராமிய வங்கிச் சங்கத்தில் ரூபா 150 இலட்சம் நிதி ரூபா 16% வட்டிக்கும் வைப்பில் இடப்பட்டு சங்கத்துக்கு வருடாந்தம் ரூபா 412,500/- வட்டி இல்லாமல் போய் உள்ளதனை அறிவீர்களா ?

இ. 2012ஆம் ஆண்டு தவிசாளரின் விருப்பத்தின் படி கம்பஹா மாவட்ட வங்கிச் சங்கத்தில் வைப்பில் இடப்பட்ட நிதி பணிப்பாளர் சபையின் முடிவிற்கு இணங்க இலங்கை தேசிய கூட்டுறவு சபையில் வைப்பில் இடப்பட்டதனால் ரூ. 468750/- மேலதிக வட்டியொன்று கிடைக்கப்பெற்றது என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

ஈ. சங்கத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் கூட்டுறவு மருந்தகத்துக்கு பெற்றுக் கொள்ளப்படும் மருந்துகளுக்காக கிடைக்கப் பெறும் கழிவு நிதியை தவிசாளர் தனிப்பட்ட ரீதியில் பெறுகின்றார் என்பதனை அறிவீர்களா ?

உ. சங்கத்தின் பாவனையாளர் பிரிவுக்கு மாதம் ஒன்றுக்கு ரூபா 15 இலட்சம் நிதி நட்டம் ஏற்படுகின்றது என்பதனை நீங்கள் அறிவீர்களா?

ஊ. இந்த ஊழல் மற்றும் மோசடிக்கு எதிராக சங்கத்தின் உப தவிசாளர் உள்ளிட்ட பணிப்பாளர் சபையின் மூன்று அங்கத்தவர்கள் 2013.06.20 ஆந் திகதி தொடக்கம் பதவிகளில் இருந்து இராஜினாமா செய்துள்ளனர் என்பதனை அறிவீர்களா ?

எ. தவிசாளரின் முறைகேடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பீர்களா ? இல்லையாயின் ஏன் ?

02. **கௌரவ சரத் பதிரன உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல், சட்டம், ஒழுங்கு, காணி, கல்வி, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், மனிதவலு மற்றும் தொழிற்றுறை, பொருளாதார மேம்பாடு மின்சக்தி, மின்வலு, வியாபார விடயப் பொறுப்பு அமைச்சரிடம் கேட்கப்படவுள்ள கேள்வி : (கே/v (1)13/14)**

அ. மே.மா/கள/ஹேனகம வித்தியாலயத்தின் அதிபரினால் பாடசாலைத் தோட்டத்தில் காணப்பட்ட தேக்க, லுனுமிதெல்ல உள்ளிட்ட 17 மரங்கள் வெட்டப்பட்டு மரம் அரியும் ஆலைக்கு அனுப்பப்பட்டன என்பதனை நீங்கள் அறிவீர்களா?

ஆ. (i) இம் மரங்களை அகற்ற அங்கீகாரம் வழங்கிய உத்தியோகத்தர்கள் யாவர் ?

(ii) அங்கீகாரம் வழங்கப்பட்ட கடிதத்தினை சபைக்கு சமர்ப்பிக்க இயலுமா ?

இ. (i) இவ் வித்தியாலயத்தில் வருடாந்தம் நடாத்தப்பட்ட "ஹேம பிரதீபா சணகெலியே" நிகழ்ச்சியில் 2011, 2012 ஆம் ஆண்டுகளில் கிடைக்கப்பெற்ற வருமானம் எவ்வளவு ?

(ii) அந் நிதி எக் கணக்கில் வரவு வைக்கப்பட்டது?

ஈ. 2012 ஆம் ஆண்டின் "ஹேம பிரதீபா சணகெலியே" நிகழ்ச்சியின் விருந்தினர் ஒருவராக கலந்து கொண்ட அரசாங்கத்தின் அமைச்சர் ஒருவர் வழங்கிய தொண்ணூராயிரம் ரூபா பெறுமதியான காசோலை எக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது ?

உ. இவ் வைபவத்தின் விருந்தினர் ஒருவரான பிரதேச சபையின் தவிசாளர் உள்ளிட்ட வேறு பிரமுகர்கள் வழங்கிய நிதி எக்கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது ?

ஊ. (i) மாகாண சபை உறுப்பினர்களின் ஏற்பாடுகளின் மூலம் இவ் வித்தியாலயத்துக்கு பெற்றுக் கொடுத்த பஸ் வண்டிக்காக மேலதிகமாக பதின் மூன்று இலட்சம் நிதி பல்வேறுபட்ட நபர்களிடம் இருந்து சேகரிக்கப்பட்டது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

(ii) அந்த நிதிக்கு என்ன நடந்தது ?

எ. (i) மே.மா/கள/ஹேனகம வித்தியாலயத்தின் அதிபர் தொடர்பாக நடைபெற்ற கணக்காய்வுப் பரிசோதனையின் சிபார்சு யாது ?

(ii) அவ் கணக்காய்வு அறிக்கையினைச் சபைக்கு சமர்ப்பிக்க இயலுமா ?

(iii) இல்லையாயின் ஏன் ?

**VI. வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை**

**VII. அமைச்சுக்களின் அறிவிப்புக்களும் / அமைச்சர்களின் தகவல்களும்**

**VIII. தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்**

**IX. பொது நடவடிக்கை**

**01. முதலமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல், சட்டம், ஒழுங்கு, காணி, கல்வி, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், மனிதவலு மற்றும் தொழிற்துறை, பொருளாதார மேம்பாடு மின்சக்தி, மின்வலு, வியாபார விடயப் பொறுப்பு அமைச்சர் (மே.மா).**

பிரேரணை :

<u>2013-குறைநிரப்பு மதிப்பீடு - 01</u>

2013ஆம் ஆண்டுக்காக மேல் மாகாண மாகாண சபையின் அமைச்சுக்கள்/திணைக்களங்கள் மற்றும் காரியாலயங்களின் பின்வரும் தேவைகளின் கீழ் அதாவது

i. அரச நிர்வாக சுற்றறிக்கை 18/2012 இன் மூலம் அதிகரிக்கப்பட்ட படி, சுகாதார அமைச்சின் பொது சுற்றறிக்கைக்கு இணங்க சுகாதார துறையில் அதிகரிக்கப்பட்ட படி மற்றும் ஆளுக்குரிய வேதனாதிகளின் கீழ் தேவையான மேலதிக செலவுகளை மேற்கொள்வதற்காக ஏற்பாடுகளை ஏற்படுத்துதல்.

ii. மேல் மாகாணத்தினுள் இறுதிச் சடங்குகளுக்குரிய தகனச் சாலைகளின் நிர்மாணத்துக்காக அரசிடமிருந்து மானியமாக கிடைக்கப்பெற்றுள்ள நிதியினை செலவு செய்ய ஏற்பாட்டினை ஏற்படுத்துதல்.

iii. மாகாண சபை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் எதிர்பார்த்த இலக்கினை அண்மித்துக் கொள்ளத் தேவையான மேலதிக ஏற்பாட்டினை ஏற்படுத்துதல்.

iv. 2012 ஆம் ஆண்டின் உலக வங்கியின் கருத்திட்டத்தின் கீழ் மேல் மாகாண சபைக்குக் கிடைக்கப் பெற்று எனினும் கருத்திட்டங்கள் அங்கீகரிக்கப்படாததன் காரணமாக மீதமாக இருந்த நிதி, 2013 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படும் ஆயிரம் இரண்டாம் தர பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மஹிந்தோதய விஞ்ஞான

கூடத்தை நிர்மாணிக்கத் தேவையான அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ள படியால் அதற்குத் தேவையான ஏற்பாட்டினை ஏற்படுத்துதல்.

v. ஆசிரிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்காக அரச மானியத்தின் கீழ் கிடைக்கப்பெற்றுள்ள நிதியினை செலவு செய்வதற்காக ஏற்பாட்டினை ஏற்படுத்துதல்.

போன்ற விடயங்களுக்காக குறை நிரப்பு மதிப்பீடொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ள படியால் அதற்காக சமர்ப்பிக்கப்பட்ட 2013 குறை நிரப்பு மதிப்பீடு - 01 *(மீண்டெழும் செலவு ரூபா 624,746,000/- மூலதனச் செலவு ரூபா 793,000,000/- மொத்த ஏற்பாடு ரூபா 1,417,746,000/-)* அங்க்கரிக்க வேண்டும்.

02. **கௌரவ பிரசன்ன ரணதுங்க - முதலமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல், சட்டம், ஒழுங்கு, காணி, கல்வி, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், மனிதவலு மற்றும் தொழிற்றுறை, பொருளாதார மேம்பாடு மின்சக்தி, மின்வலு, வியாபார விடயப் பொறுப்பு அமைச்சர் (மே.மா).**

பிரேரணை :

<u>2013-குறைநிரப்பு மதிப்பீடு – 01 உரிய ஒதுக்கீட்டு நியதிச் சட்டம்</u>

“2013 ஆம் ஆண்டின் குறை நிரப்பு மதிப்பீடு 01 இற்குத் தேவையான ரூபா நூற்று நாற்பத்தொரு கோடியே எழுபத்தேழு இலட்சத்து நாற்பத்து ஆறாயிரம் (ரூபா 1,417,746,000/-) ஆகிய நிதியை மேல் மாகாண சபை நிதியத்தில் இருந்து செலுத்துவதற்கும் இலங்கை அரசினால் மானியமாகவோ அல்லது வேறு முறையில் கிடைக்கப்பெறும் நிதியை மேல் மாகாண சபை நிதியத்திற்கு பெற்றுக் கொள்வதற்கு அதிகாரம் வழங்கும் 2013 இன் ............. ஆம் இலக்க ஒதுக்கீட்டு நியதிச் சட்டத்தை அங்கீகரிக்க வேண்டும். ”

## X. தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கைகள்

### 01. கௌரவ சிறிகமல் பிலீஷியன் த சில்வா உறுப்பினர்

*இலங்கையானது சுதந்திரக் கல்வி நடைமுறையில் உள்ள நாடொன்று என தெரிவிக்கப்படுகின்றது, எனினும் நாட்டினுள் மத்திய அரசு, மாகாண சபை, தனியார், சர்வதேச என பாடசாலைகள் இயங்குகின்றன என்பதை நாங்கள் அறிவோம் இவற்றுள் பெரும்பாலான பாடசாலைகள் மாகாண சபைகளுக்கே உரியதாகின்றன இம் மாகாண சபைகள் வருடாந்தம் வரவு செலவு திட்டத்தின் மூலம் அதிகளவு நிதி கௌரவ முதலமைச்சர் அங்கத்துவம் பெறும் கல்வி அமைச்சுக்கு ஒதுக்கப்படுகின்றது எனினும் எங்கள் மாகாண பாடசாலைகளின் பராமரிப்புக்காக வருடாந்தம் ஒதுக்கப்படும் நிதி போதுமானதாக இல்லை என அதிகாரியினால் தெரிவிக்கப்படுவதன் காரணமாக பெற்றோர்கள் பழைய மாணவர்கள், நன்கொடையாளர்கள் மற்றும் வேறு பல்வேறுபட்ட முறைகளின் மூலம் பாடசாலைகளின் குறைபாடுகள் தீர்க்கப்படுகின்றன என்பது வெளிப்படையாகும் ஒழுங்கற்ற முறையில் இடம்பெறும் இந் நடவடிக்கையின் காரணமாக பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும் ஏற்படும் கஷ்டத்தை தவிர்ப்பதற்காக ஒழுங்கான முறை ஒன்றினை விரைவாக தயாரிக்க வேண்டும் என இந்த மேல் மாகாண மாகாண சபை எண்ணுகிறது.*

(பி/v (01)13/02)

### 02. கௌரவ லலித் எல்லாவல உறுப்பினர்

*“தற்போது காணப்படும் மாகாண சபை மற்றும் பாராளுமன்ற விகிதாசார தேர்தல் முறையானது, போட்டியிடும் அபேட்சகர்கள் அதே போல் வாக்காளர்களுக்கு மிகவும் கஷ்டமான தேர்தல் முறையொன்று ஆகிய படியால் எதிர்காலத்தில் நடைபெறும் எல்லா தேர்தல்களையும், புதிய உள்ளூராட்சி முறையின் மூலமும், மாகாண சபையை தொகுதி அடிப்படையிலும், பாராளுமன்ற தேர்தலை தொகுதி அடிப்படையிலும் நடாத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என மேல் மாகாண மாகாண சபை அரசுக்கு பிரேரணை தெரிவிக்கின்றது. ”* (பி/v (01)13/04)

## XI. சபை ஒத்திவைப்பு

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,

**மேல் மாகாண மாகாண சபை**

2013.09.03 ஆந் திகதி
**சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா.)**
**மேல் மாகாண மாகாண சபை,**
5ஆம் மாடி, B அலகு,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.